விழுப்புரம், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்
ஆணையிடுபவர்: திரு.கோ.இரமணன்,பி.எஸ்ஸி. (விவ).,

செ.மு.எண்.அ2/8776/2020 நாள்:20.12.2020

பொருள்: பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4ல் அடங்கிய பணிகள்–நேரடித் தேர்வு மூலம் 2018–19 மற்றும் 2019–20ம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் (பி) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – இளநிலை உதவியாளர் (பி) பதவியில் பணியில் சேர்ந்து கொண்டது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்– தொடர்பாக.

பார்வை: 1) வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செ.மு.ஆணை எண் அநிபி5/22094/2020, நாள்:05.08.2020.
2) இவ்வலுவலக செ.மு. ஆணை எண்.அ2/8776/2020 நாள் 13.08.2020.

-----

பார்வை (1)–இல் காணும் செயல்முறை ஆணையின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் 2018–19 மற்றும் 2019–20 ஆம் ஆண்டில் தொகுதி 4ல் நேரடி போட்டித் தேர்வின் மூலம் இளநிலை உதவிளாயர் (பி) பதவியக்கு ரூ.19500–62000(Level-8) என்ற ஊதிய விகிதத்தில் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டு இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்காணும் பணியாளர்களுக்கு பார்வை 2ல் காணும் செயல்முறை ஆணையின்படி பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து இத்தனியர்கள் தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதியில் இளநிலை உதவியாளர்(பி)–ஆக கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு அரசுப்பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர்/பதவி பணிநியமனம் செய்யப்பட்ட அலுவலகம் | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய பதிவெண்/வ.எண் மற்றும் நியமன ஆணை எண் மற்றும் நாள் | இளநிலை உதவியாளர் (பி) பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் (பி) பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.கபிலன், இளநிலை உதவியாளர்(பி) துணை வேளாண்மை விரிவாக்க மையம், பென்னகர்/ வே.உ.இ அலுவலகம், வல்லம் | 071045189<br>158<br>**TNPSC Letter No.2359/PSD1/2020, Date: 29.05.2020** | 21.08.2020 முற்பகல் | 21.08.2020 முற்பகல் |
| 2 | திரு.பி.ராம்ராஜ், இளநிலை உதவியாளர்(பி), துணை வேளாண்மை விரிவாக்க மையம், மணலூர்பேட்டை/ வே.உ.இ அலுவ்லகம், முகையூர். | 2614016299<br>203<br>**TNPSC Letter No.2359/PSD1/2020 Date:29.05.2020** | 25.08.2020 முற்பகல் | 25.08.2020 முற்பகல் |

மேற்கண்ட இளநிலை உதவியாளர்(பி)—களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்தரவிடப்படுகிறது.

மேலும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 34 இணைப்பு 5—இன்படி இப்பணியாளர்களுக்கு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்ட நாளில் இருந்து இரண்டாண்டு காலத்திற்குள் பவானிசாகரில் அளிக்கப்படும் அரசு அலுவலருக்கான அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும் எனவும் தகுதிகாண் பருவம் முடித்தப் பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்த ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்படுமென தெரிவித்து உத்தரவிடப்படுகிறது.

மேற்காணும் பணிவரன்முறை ஆணை 2018—19 மற்றும் 2019—20 ஆம் ஆண்டு தொகுதி IV ல் அடங்கிய நேரடி பணிநியமனங்கள் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை உயர் நீதிமன்ற கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் தீர்ப்புகளுக்குட்பட்டதாகும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் இவ்வுத்திரவு வழங்கப்படுகிறது.

**''This regularisation is subject to the outcome of the W.P's pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of Hon'ble High court of Madras relating on the recruitment to the post included in Combined Civil Services Examination -Group-IV Services for the year 2018-19, and 2019-20 recruitment''.**

ஒம்/—கோ.இரமணன்
வேளாண்மை இணை இயக்குநர்
விழுப்புரம்.

பெறுதல்:
மேற்கண்ட பணியாளர்கள்.

வழி: வேளாண்மை உதவி இயக்குநர், வல்லம் மற்றும் முகையூர்.

நகல்: பணிப்பதிவேட்டிற்கு

நகல்: இருப்புக் கோப்பிற்கு

உபரி: 1

//ஆணைப்படி//

21/12/21
கண்காணிப்பாளர்.

21/12/21